IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
OS.No.–121/2006

DEPOSITION OF WITNESS – PW 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனி | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | சன்னாசி | ஊர் | |
| தொழில் | நீதிமன்ற ஆணையர் / வழக்கறிஞர் | மதம் | |
| வயது | | | |

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.09.2025 in accordance with the provisions of Act XX141.**

முதல் விசாரணை

1. நான் இந்த வழக்கில் நீதிமன்றத்தால் தாவா வழக்கை அளவீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளேன். அதன்படி தாவா சொத்தை அளவீடு செய்து நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ. 2 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் மேற்படி நீ.ம.சா.ஆ. 1 , நீ.ம.சா.ஆ. 2 சம்பந்தமாக சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன்.

2. எனது அறிக்கையில் பக்கம் 2, பத்தி 3, வரி 9 ல், "மாதிரி வரைபடத்தில் DCH, IJK கிழமேல் அளவு 100 அடி என குறிப்பிட்டுள்ளேன். ஆனால் வரைபடத்தில் DCH, IJK கிழமேல் அளவு 112 அடி என்று குறிப்பிட்டுள்ளேன். 112 என்பதுதான் சரி. அறிக்கையில் 100 அடி என்று சொன்னது தவறு. நீ.ம.சா.ஆ. 1 ல் பக்கம் 3, வரி 13 ல், " IM பகுதி 120

அடியாக இருந்தது என்று குறிப்பிட்டுளேன். ஆனால் வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை. வரைபடத்தில் HL என்று குறிப்பிட்டுள்ள பகுதியில் 88 அடி என்று குறிப்பிட்டுள்ளேன். "IM 120" அடி என்பது தவறு. ஸ்தளத்தில் 88 அடிதான் உள்ளது.

3. எனது அறிக்கை நீ.ம.சா.ஆ. 1 ல், பக்கம் 4, வரி 15 ல், "மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பிரச்சனைக்காக தாவா சொத்து ABCHL, MIJK காலி மனை இடமாகும் என்று குறிப்பிட்டுள்ளேன். வரைபடத்தில் தாவா 3வது இலக்க சொத்தை DKLM என்று குறிப்பிட்டுள்ளேன். வரைபடத்தில் நீ.ம.சா.ஆ. 2 ல் " GE 20 அடி என்று குறிப்பிட்டுள்ளேன். அதில் AF 23 அடி சரியாக குறிப்பிட்டுள்ளேன். FD பகுதியை 23 அடி என்று தவறாக குறிப்பிடப்படவில்லை. GE பகுதியும் AF பகுதியும் ஒரே அளவாக இல்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சொத்தை நான் வருவாய் ஆவணங்களான புல வரைபடம், அ பதிவேடு, 10(1) சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களின் படி அளக்கவில்லை என்றால் அடங்கல் கணக்கு மட்டும் கொண்டு அளவீடு செய்தேன். மேற்படி அடங்கல் கணக்கில் தாவா சொத்து யாருடைய பெயரில் இருந்தது என்பதையும் பிரதிவாதி அனுபவம் செய்யும் இடம் யார் பெயரில் உள்ளது என்பதையும் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

2. தாவா சொத்து வருவாய் ஆவணங்களின் படி யார் பெயரில் இருந்தது என்பதை எனது அறிக்கையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை புல வரைபடம் கொண்டு அளக்காத நிலையில் எவ்வாறு அளந்தேன் என்றால் வாதி, பிரதிவாதி அடையாளம் காட்டிய

சொத்தை அளந்தேன். அதற்கு முன்பாக வாதி, பிரதிவாதியின் கிரைய ஆவணங்களை பார்த்தேனா என்றால் ஜெராக்ஸ் ஆவணங்களை பார்வையிட்டேன்.

3. மேற்படி வாதி கொடுத்த ஜெராக்ஸ் கிரைய ஆவணத்தில் புல எண் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் புல எண் குறிப்பிடப்படாமல் உள்ளநிலையில் நான் வாதிக்கு ஆதரவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள நான்குமால்படியும் நான் அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களின் படி புல எண்.214/22 என்பது அரசாங்க சந்து என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி சந்துப்பகுதி வாதிக்குதான் பாத்தியப்பட்டது என தவறாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. நில அளவையர் மூலமாக தாவா சொத்து அடையாளம் காணப்படாத நிலையில் எனது வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள இடைகால அறிக்கையுடனான வரைபடத்திற்கும் தற்போதைய வரைபடத்திற்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN
MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.16 14:11:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.